முருகப்பெருமான் துணை

**மகான் ஆனாய நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.02.2023, புதன்கிழமை

1. மாதவ சக்தியே அரங்கராசா
மண்ணுலகை காக்க வந்து
பூதலத்தில் சன்மார்க்கம் அருளி
புதுமை படைக்கும் குருராசனே
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது கலைதிங்கள்
வரமென மூவாறுதிகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 18 ம் நாள் 01.02.2023, புதன்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை ஆனாய நாயனாரும்
அருளுவேன் உலகநலம் பெற
வாசி வென்ற ஞானிகள் படை
வரம் தந்து பிரணவக்குடிலில் அருள
4. அருளவே கலியுக மக்கள்
அரங்கமகான் பிரணவக்குடிலுக்கு
வருமுலகில் தொடர்ந்து வந்து
வரம் வேண்டி ஆசி ஏற்க
5. ஏற்கவே துன்பங்கள் விலகி
இன்பமான மாற்றம் கிட்டும்
ஏற்பு கொண்டு அரங்கன் வழி
எல்லா ஞானிகளும் இணைந்துமே
6. இணைந்துமே வரங்கள் தருவர்
எண்ணம் வழி மகா சக்திகள்
இணைந்து கலந்து மாற்றம்
எல்லா வகையும் வந்தடையும்
7. அடையவே அரங்கன் தருமத்திலும்
அனைவரும் கலந்து பொருளுதவி
தடையற செய்து நன்கு
தருமபலம் பெருக்கி வர
8. வருகவே வையகம் எங்கிலும்
வள்ளல் தன்மையாக மாறி
தரும பலமிக்க ஞான பூமியாக
தயவுமிக்க மக்கள் படையாக
9. ஆகவே மாற்றம் கண்டுமே
அரங்கமகான் ஆசியின் வழி
யுகமாற்றமாக நடந்தேறக்கூடும்
உலகமெங்கிலும் ஞானிகள் வெளிப்பட்டு

10. வெளிப்பட்டு வழிகாட்டல் பெருகி
வேலவனார் வழிபாடும் பெருகி
தெளிவுபட ஞானிகள் ஆசிபட
தேசிகனின் தொண்டர்படைகள் வழி

11. வழிதனில் உலகமாற்றமதும்
வந்தடையும் ஞானத்தலைமையாக
அழியாமை தரும் ஞான ஆட்சியுமாக
அகிலம் கண்டு சிறப்புறும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–